MINISTRY OF MANPOWER

ACE

# CONNECT with ACE

வெளிநாட்டு ஊழியர்களுக்கான மாதாந்திர மின் செய்திமடல்



ஜூன் 2023



## இந்த இதழில்:


பிரபல மோசடிகளுக்கு எதிராக விழிப்புடன் இருக்கவும்

எதிர்வரும் குற்றத் தடுப்பு சாலைக் காட்சி

நிகழ்வின் சிறப்பம்சங்கள்

முக்கிய அறிவிப்புகள்






https://go.gov.sg/anti-scam

மோசடிகளுக்கு எதிராக உங்களை எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது என்பது பற்றி மேலும் அறிய ஏஸ் டிக்டொக்(TikTok) காணொளியைப் பார்க்கவும்

# பிரபல மோசடிகளுக்கு எதிராக விழிப்புடன் இருக்கவும்

## அரசாங்க அதிகாரிகளைப் போல ஆள்மாறாட்ட மோசடிகள்

- விழிப்புடன் இருங்கள்! **அரசாங்க அதிகாரி என்று கூறிக்கொள்ளும் எவருக்கும் தனிப்பட்ட அல்லது நிதி சார்ந்த தகவல்களைத் தெரிவிக்க வேண்டாம்.**

## ஸ்கேம்ஷீல்ட் செயலி தூண்டில் (ஃபிஷிங்) மோசடிகள்

- போலி ஸ்கேம்ஷீல்ட் (ScamShield) செயலி தூண்டில் மோசடிகளுக்குப் பலியாக வேண்டாம்! **சந்தேகத்திற்கிடமான கோப்புகளை மூன்றாம் தரப்பு அல்லது சந்தேகத்திற்குரியத் தளங்களிலிருந்து பதிவிறக்க வேண்டாம்.** ஏனெனில் இது உங்கள் மின்னியல் சாதனத்தில் ஃபிஷிங் தீய மென்பொருள் நிறுவப்படுவதற்கு வழிவகுக்கும், அதோடு உங்கள் மின்னியல் சாதனத்தை மோசடிக்காரர்களின் கட்டுப்பாட்டின் கீழ் வர இது அனுமதிக்கலாம்.

**அதிகாரப்பூர்வ கூகல் ப்ளே ஸ்டோர் அல்லது ஆப்பிள் ஆப் ஸ்டோரிலிருந்து ஸ்காம்ஷீல்ட் செயலியைப் பதிவிறக்கவும்**

**இன்றே இலவச செயலியைப் பதிவிறக்கவும்!**

என்சிபிசி (NCPC) மற்றும் எஸ்.பி.எஃப் (SPF) அமைப்புகளால் நிர்வகிக்கப்படும் தரவுத்தளத்திலிருந்து மோசடி குறுஞ்செய்திகளைக் கண்டறிந்து மற்றும் அழைப்புக

GET IT ON Google Play

Download on the App Store

# வெப்பத் தாக்கத்திலிருந்து உங்களைத் பாதுகாத்துக்கொள்ளுங்கள்



## 1. நிழலில் இருங்கள்

- முடிந்தால் நேரடி சூரிய ஒளியிலிருந்து விலகி உட்புறங்களில் இருங்கள்.
- பகலில் பொழுதுபோக்கு நடவடிக்கைகளைத் தவிர்க்கவும்.



## 2. தண்ணீர் அருந்துவதை உறுதி செய்யுங்கள்

- ஒவ்வொரு வேலை நாளின் துவக்கத்திலும் தண்ணீர் நிரப்பப்பட்ட ஒரு பாட்டிலை எடுத்துச் செல்லுங்கள். பாட்டிலில் நீர் குறையும்போது தவறாமல் நிரப்பிக்கொள்ளுங்கள்.
- முடிந்தால், அரை மணிநேரத்துக்கு ஒருமுறை ஒரு டம்ளர் குளிர்ந்த நீரை அருந்துங்கள்.
- மது, கா:பின், இனிப்பு அதிகம் உள்ள பானங்களைத் தவிர்க்கவும்.



## 3. காற்றோட்டமுள்ள ஆடை அணியுங்கள்

- வெப்பமான சூழலில் வேலை செய்யும்போது முடிந்தவறை தளர்வான, வெளிர்நிற ஆடைகளை அணியுங்கள்



## 4. நல்ல காற்றோட்டத்தை உறுதி செய்யுங்கள்

- தங்கும் விடுதி அறையில் நாள் முழுவதும், மின்விசிறிகள் அல்லது பிற விசிறிகள் அனைத்தையும் இயங்க விடுங்கள்.

**உங்களுக்கு உடல் நலம் சரிஇல்லாவிட்டால், உங்கள் மேற்பார்வையாளர் அல்லது விடுதி நடத்துநரிடம் உடனே சொல்லுங்கள். மருத்துவரைச் சென்று காணுங்கள்.**

# நமது சுற்றுப்புறத்தை சுத்தமாகவும் பசுமையாகவும் வைத்திருப்போம்!

**மேலும் அறிக**

https://go.gov.sg/no-littering



*குப்பை போடுவதற்காகப் பிடிபட்டால், குறைந்தபட்சம் $300 அபராதம் விதிக்கப்படும்*

MINISTRY OF MANPOWER

ACE

# குற்றத் தடுப்பு
# சாலைக் காட்சி

## JOIN US

**18 ஜூன் 2023** | மாலை 4 மணி முதல் - இரவு 8 மணி வரை

**கொக்ரேன் பொழுதுபோக்கு மையம்**
**100 செம்பவாங் டிரைவ் (756998)**

## நிகழ்ச்சியின் சிறப்பம்சங்கள்

குற்றத்திற்கு எதிரான

தடுப்பு நடவடிக்கைகள் பற்றி அறிந்துக்கொள்ளவும்

கவர்ச்சிகரமான பரிசுகளை

வெல்லவும்

**மற்றவர்களோடு எவ்வாறு இணக்கத்துடன் வாழ்வது** என்பது பற்றியக் காணொளியை ஏஸ் டிக்டொக் செயலியில் பாருங்கள்

# நிகழ்வின் சிறப்பம்சங்கள்



## செர்ரிலாஃப்டில் பல அமைப்புகள் நடத்தும் சாலைக் காட்சி

மே 14 அன்று, சிங்கப்பூர் சுங்கத்துறை மற்றும் நிலப் போக்குவரத்து ஆணையத்துடன் இணைந்து பாசிர் ரிஸ் அக்கம்பக்க காவல் நிலையம் ஏற்பாடு செய்த, பல அமைப்புகளுக்கு இடையிலான சாலைக் காட்சியை செர்ரிலாஃப்ட்டைச் சேர்ந்த 300 குடியிருப்பாளர்களுக்காக நடத்தினோம். மோசடிகளுக்கெதிரான நடவடிக்கைகள், சுங்கவரி செலுத்தப்படாதப் பொருட்களைக் கண்டறிதல் மற்றும் சாலை பாதுகாப்பைக் கவனத்தில் கொள்வது பற்றிய பயனுள்ள தகவல்களையும் அறிவையும் வெளிநாட்டு ஊழியர்கள் பெற்றனர்.

## கொக்ரேன் பொழுதுபோக்கு நிலையத்தில் உடல்நல பரிசோதனை

மை பிரதர் எஸ்ஜி மற்றும் டியூக்-என்யுஎஸ் மருத்துவப் பள்ளி ஏற்பாடு செய்திருந்த உடல்நலப் பரிசோதனை நிகழ்ச்சி கொக்ரேன் பொழுதுபோக்கு நிலையத்தில் நடைபெற்றது. இதில் 600க்கும் மேற்பட்ட வெளிநாட்டு ஊழியர்கள் கலந்து கொண்டனர். வெளிநாட்டு ஊழியர்கள் அடிப்படை சுகாதார பரிசோதனையைப் பெற்றதோடு தங்களின் உடல்நலம் மற்றும் நல்வாழ்வைக் தாங்களே கவனித்துக்கொள்ள ஊக்குவிக்கும் கற்றல் விளையாட்டு நடவடிக்கைகளிலும் பங்கேற்றனர்.





## கிமேஜ் சிகையலங்கார நிறுவனத்துடன் இணைந்து இட்ஸ் ரெயினிங் ரெயின்கோட்ஸ் (IRR) வழங்கும் முடி திருத்தும் சேவை

கிமேஜ் சிகையலங்கார நிறுவனத்துடன் IRR இணைந்து, தங்குவிடுதிகளில் வெளிநாட்டு ஊழியர்களுக்கு மாதந்தோறும் இலவச முடி திருத்தும் சேவையை ஏற்பாடு செய்துள்ளது. மே 14 அன்று, 7 செனோகோ சவுத் ரோட்டைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட வெளிநாட்டு ஊழியர்கள் இலவச முடி திருத்தும் சேவையைப் பெற்றனர்!






இங்கே கொடுக்கப்பட்டுள்ள கியூஆர் குறியீட்டை ஒளிவருடுவதன் மூலம் எங்கள் ஃபேஸ்புக் நிகழ்வுப் பக்கத்தில் நீங்கள் பங்கேற்கக்கூடிய பல்வேறு **நேரடி மற்றும் இணைய நடவடிக்கைகளைப்** பற்றி மேலும் அறியவும்

https://go.gov.sg/acegroupfacebook

*சமீபத்திய செய்திகள் மற்றும் தகவல்களைப் பெற எங்கள் அதிகாரப்பூர்வ ஒளிவழிகளில் எங்களைப் பின்தொடரவும்!*

ACE Group's Facebook page

ACE Group's TikTok channel